# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www. tneo.gov.in

**முன்னிலை : திரு.ஆ. தர்மராஜ் – மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண். 41 / 2012**

திரு. கே. கே. ராஜு,
த/பெ லேட் கே.ஆர். கிருஷ்ணன்,
கூக்கல், க.எண்.6/611,
கக்குச்சி அஞ்சல்,
நீலகிரி மாவட்டம் . . . . . . .மேல் முறையீட்டாளர்

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
நீலகிரி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
உதகமண்டலம் . . . . . . . எதிர்மனுதாரர்

**ஆணை நாள் : 25–10–2012**

1. திரு. கே.கே. ராஜு, த/பெ. திரு. கே..ஆர். கிருஷ்ணன்(லேட்) கூக்கல் அவர்கள், அவரின் விவசாய மின்இணைப்பு விண்ணபத்தை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்ற வரிசையில் சிறப்பு முன்னுரிமை தந்து அவரின் விவசாயத்திற்கு நீர்ப்பாசன வசதிக்கு இலவச மின்சாரம் வழுங்கவேண்டும் என்று கேட்டுள்ளார். மேலும், அவர் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பிரிவிலுள்ள விவசாயிகளுக்கு, விவசாயத்திற்கு இலவச மின்சாரம் வழங்க ஆணையுள்ளதால், அவர் தனது மூன்று ஏக்கர் விவசாய நிலத்தில் விவசாயம் செய்வதற்காக தமிழ்நாடு பிற்பட்டோர் பொருளாதார கழக திட்டத்தின் மூலம் மானியத்துடன் வழங்கப்படும் கடன் திட்டத்தில் கடன் பெற்றுள்ளதாகவும், விவசாயத்திற்கு சரியான நீர்ப்பாசன வசதியில்லாததால், விவசாயத்திற்கு பெற்ற கடனை செலுத்த முடியாமல் உள்ளதாகவும் மேற்கண்ட கடன் தொல்லையிலிருந்து மீள நீர்பாசனத்திற்கு இலவச மின்சாரம் வேண்டி கருணை மனு அனுப்பியதாகவும் தெரிவித்துள்ளார்.

2. மேற்பார்வை பொறியாளர், நீலகிரி மின்பகிர்மான வட்டம் அவர்கள் மனுதாரர் சிறப்பு முன்னுரிமை பெற விரும்பினால் அதற்கான அரசு ஆணை வழங்கும்

பட்சத்தில் மின்இணைப்பு வழங்கப்படும் என்று தெரிவித்திருந்தார் என்ற தகவலையும் தெரிவித்துள்ளார்.

3. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் , மின்துறை அமைச்சர், விவசாயத்துறை அமைச்சர் மற்றும் மின்சாரம் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் மனு செய்ததாகவும் தெரிவித்துள்ளார்.

4. மேலும், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் செயலாளர், அவர்களின் 10.5.2012 நாளிட்ட கடிதத்தில் கூறியுள்ளபடி, நீலகிரி மின்பகிர்மான வட்டம் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் தலைவர், (மேற்பார்வை பொறியாளர்) அவர்களிடம் தனது விவசாய மின் இணைப்பு சம்பந்தமாக மனு செய்ததாகவும் அம்மனுவின் மீது மன்றம் 17.8.2012 அன்று தன்னுடைய ஆணையை வழங்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

5. மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் நீலகிரி மின்பகிர்மான வட்டம், தன்னுடைய 17.8.2012 ஆணையில் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளது.

*"On perusal of the records, it is clear that no service has been effected under BC/MBC category for those who have registered later than Thiru. K.K. Raju.*

*The petitioner produced a letter issued by the Welfare Officer, Backward, Most Backward & Minorities Welfare , Udhagamandalam S4/3022/2008 dated 3.7.2012 and handed over during the meeting. Letter states that Thiru. K.K. Raju is a beneficiary of small and marginal farmers irrigation scheme under BC/MBC category and has availed loan, hence he may be extended free agriculture supply. Marked as exhibit A1.*

*Therefore, we are of the opinion that additional target for agriculture service under BC/MBC category may be requested from the competent authority for the year 2012-2013 and service effected to Thiru. K.K. Raju as and when the target is received. "*

6. அவர் மனுவின் மீது மேற்கண்ட மன்றத்தின் 17.8.2012 நாளிட்ட தீர்ப்பு தனக்கு திருப்தி அளிக்கவில்லை என்பதால் மேல்முறையீடு செய்வதாகவும் தெரிவித்துள்ளார்.

7. மேல்முறையீட்டாளரின் மனுவின் நகல், மேற்பார்வை பொறியாளர், நீலகிரி மின்பகிர்மான வட்டத்திற்கு 24.9.2012 அன்று அனுப்பப்பட்டு, உடன்பாடு எதுவும் ஏற்படவில்லை என்றால், எதிர் உரை சமர்ப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது.

8. நீலகிரி மின்பகிர்மான வட்ட மேற்பார்வை பொறியாளர் அவர்கள் தன்னுடைய **11.10.2012** நாளிட்ட கடிதத்தில், **10.10.2012** அன்று நடந்த கூட்டத்தில் மேல்முறையீட்டாளருக்கும் உரிமம்தாரருக்கும் உடன்பாடு ஏற்பட்டுவிட்டதாக தெரிவித்து, அதுசம்பந்தமாக மேல்முறையீட்டளர், எழுதிய கடிதத்தினை சமர்ப்பித்துள்ளார்.

9. மேல்முறையீட்டாளர் தன்னுடைய **10.10.2012** நாளிட்ட கடிதத்தில் கீழ்கண்டவாறு கூறியுள்ளார்.

*"10.10.2012 அன்று தங்கள் அலுவலகத்தில் நடந்த குறைதீர்ப்பு கூட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் கோட்டாவில் இலவச விவசாய மின் இணைப்பு வேண்டி அனுப்பிய மனுவின் மீதான துறை நடவடிக்கை குறித்து எனக்கு எடுத்துரைக்கப்பட்டது. மேலும், தலைமை பொறியாளர் / கோவை அவர்கள் தலைமை பொறியாளர் / திட்டமிடல் சென்னை அவர்களுக்கு ஒரு கூடுதல் குறியீடு வழங்குமாறு கேட்டுக் கொண்டதின் கடிதம் எனக்கு காண்பிக்கப்பட்டது.*

*எனவே, விரைவில் குறியீடு பெற்று எனக்கு இலவச விவசாய மின் இணைப்பு வழங்கப்படும் என்பதன் அடிப்படையில் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தில் சமர்ப்பித்த எனது மேல்முறையீட்டு மனுவை திரும்ப பெற்றுக் கொள்கிறேன் என்பதனை மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். "*

10. மேல்முறையீட்டாளர் திரு. கே.கே. ராஜு அவர்கள், மேற்பார்வை பொறியாளருக்கு எழுதிய கடிதத்தில் , தலைமைப் பொறியாளர் / கோயம்புத்தூர் அவர்கள், தலைமைப் பொறியாளர்/திட்டமிடலுக்கு கூடுதல் குறியீடு வழங்கும்படி கேட்டுக் கொண்ட கடிதம் காண்பிக்கப்பட்டதாக தெரிவித்து, விரைவில் கூடுதல் குறியீடு பெற்று அவருக்கு விவசாய மின்இணைப்பு வழங்கப்படும் என்பதன் அடிப்படையில் அவரின் மேல் முறையீட்டு மனுவை திரும்ப பெற்றுக் கொள்வதாக தெரிவித்து உள்ளதால், மேற்கூறிய மேல்முறையீட்டு மனு எண். 41 / 2012 தள்ளுபடி செய்யப்படுகிறது என்று மின்குறைதீர்ப்பாளரால் தீர்வு செய்யப்படுகிறது.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறை தீர்ப்பாளர்

<u>பெறுநர்</u>

1. திரு. கே. கே. ராஜு,
த/பெ லேட் கே.ஆர். கிருஷ்ணன்,
கூக்கல், க.எண்.6/64,
கக்குச்சி அஞ்சல்,
நீலகிரி மாவட்டம்

2. மேற்பார்வை பொறியாளர்,
நீலகிரி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
உதகமண்டலம்

3. தலைவர் (மேற்பார்வை பொறியாளர்),
மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
நீலகிரி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
உதகமண்டலம்

4. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை
சென்னை – 600 002.

5. செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர், சென்னை – 600 008.

6. உதவி இயக்குநர் (கணிணி) **– இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர், சென்னை – 600 008.